# பிறந்த நாள் வாழ்த்து!

## திரு. இலெ. சௌந்தர ராஜன்

**நாள்: 21-11-2023**

மண்ணிலே நன்மகனாய் வந்துதிக்க;
மறுவிலா தமக்கை இருவராக,
எண்ணிய கல்விதனைத் தந்தை தர;
எழுதிய எண்ணமாய் வாழ்வைத் தேட,
புண்ணியம் கடவுள் எனவாய்ப்,
புகன்றவை யாவும் விடுத்தே,
எண்ணிய வழியில் நடக்கும்,
எங்களின் நண்பன் **சௌந்தர்**

கூடி மகிழ்ந்து யாவரும் இன்று,
குவலயத்தில் போற்றிட வேண்டும்!
ஆடிப் பாடி மகிழ்வில் திளைத்திட,
அவனை நிமிர்த்திடல் வேண்டும்!
தேடிய மகிழ்வை நாளுமவன்,
தொடர்ந்து பெற்றிட வேண்டும்!
நாடிய அன்பில் திளைந்து,
நவிலுவேன் **பிறந்த நாள் வாழ்த்து!**

- அன்புடன்,

கு.ப. அசோகன்,
21-11-2023

